கருத்துக்களை அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது இரண்டு பேருக்கும் தெரிந்த இரகசியம். மேற்கொண்டு இந்த பிரச்சினையை வலியுறுத்தாமல், வற்புறுத்த மாட்டார் என்று நம்புகிறேன். இந்த பிரச்சினையிலே மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று தீர்மானிக்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்

(அ) விதி 58 ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒரு நாளில் ஒரு பொருளுக்கு மேல் பேரவையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றுள்ள பேரவை விதி 58-ஐ தளர்த்தி இன்று பேரவையில் இரண்டு பொருள்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மொழிகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் க. அன்பழகன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், ப. நெடுமாறன், ரா. உமாநாத், ரா. கிருஷ்ணன்' மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, சி. சிவசாமி, எஸ். ஆண்டித்தேவர், கே. தனக்கோடித் தேவர், எஸ். இராஜாராமன், சோ. அழகர்சாமி, பி. எம். தங்கவேல்ராஜ், என். எஸ். வி. சித்தன் ஆகியோர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜே எஸ். ராசு அவர்களைத் தலைவராகவும் திரு. ஈஸ்வரன் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு இருக்கின்ற இந்த தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி பெரும்பான்மையான அசிரியர்களிடத்திலே ஒரு கணிசமான ஆதரவுள்ள ஒரு அமைப்பு, அந்த அமைப்பின் சார்பாக சமீபத்திலே நடைபெற்ற மாநில மாநாட்டில் மாண்புமிகு மாநில முதல் அமைச்சர் அவர்கள் பங்கு கொண்டார்கள்.